1970-71-ல் மாண்புமிகு அமைச்சர்களின் இருப்பிடங்களுக்கு, மேசை, நாற்காலிகள், அறை அலங்காரப் பொருள்கள், புதுப்பித்தல், பழுது பார்த்தல், பேணுதல் முதலியவை குறித்து அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1970-71-ஆம் ஆண்டில் தமிழக அமைச்சர்கள் குடியிருக்கும் வீடுகளைப் பராமரிப்பதற்காகவும், மரச்சாமான்கள், பொருட்கள், திரைச்சீலைகள், வீடுகளைப் புதுப்பித்து பழுது பார்ப்பதற்கும் மொத்தம் ரூபாய் 1,70,874 செலவாகியுள்ளது.

New road along the sea coast

*46 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any new road has been laid along the sea coast in Santhome area in Mylapore, Madras; and

(b) if so, the details thereof?

கடற்கரையை ஒட்டிய புதிய சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை மைலாப்பூர் சாந்தோம் பகுதியின் கடற்கரை நெடுக புதிய சாலை ஏதேனும் போடப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) அகில இந்திய வானொலி நிலையத்தின் எதிரிலுள்ள மெரினா கடற்கரை-முதல், ஓசியானிக் ஓட்டலின் எதிரில் தெற்கு கடற்கரையும் சேரும் இடம் வரையிலும், கடற்கரையை ஒட்டி ரூபாய் 20.85 இலட்சம் செலவில் ஒரு விஸ்தரிப்புச் சாலை போடும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

Celluar concrete plant Ennore

*47 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the cellular concrete plant of the State Housing Board is to be set up at Ennore; and

(b) if so, the details thereof?

எண்ணூர் புழை கற்கலவை தொழிற்சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) எண்ணூரில், மாநில வீட்டு வசதி வாரியத்தின் புழை கற்கலவை தொழிற்சாலை (Cellular Concrete Plant) அமைக்கப்படவிருக்கிறதா?